DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

| | |
|---|---|
| Calender Miscellaneous | **CC.No. 46 /2024** |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of witness for | Prosecution<br>Defence |

| | | |
|---|---|---|
| Name | : | **நாச்சி** (PW. 3 ) |
| Father/Husband Name | : | **கண்ணன்** |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15th day May of 2025

(எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை:-**

நான் தற்போது கீழஉப்பிலிக்குண்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 29.10.2020 ம் தேதி காலையில் வக்கானங்குண்டுவில் நடந்த திருணமத்திற்கு நான், எனது கணவர், எனது மாமனார், எனது மகன் மற்றும் எனது இருமகள்கள் ஆகியோர்கள் சென்றிருந்தோம். எனது மாமனார் அய்யாவு எங்கள் வீட்டிற்கு போகவேண்டும் என்று சொன்னதால் எனது நாத்தனார் மகன் அஜீத் அவரது நண்பரின் இருசக்கர வாகனத்தை வாங்கிகொண்டு அஜீத் வண்டியை ஓட்ட எனது மகன் மற்றும் மாமனார் பின்னிருக்கையில் அமர்ந்து கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி தேசிய நெடுஞ்சாலையை இருசக்கர வாகனத்தில் கடப்பதற்கு சென்டர் மீடியனில் நின்று கொண்டிருந்த போது காரியாபட்டிலிருந்து - தூத்துக்குடி

செல்லும் வழியில் வந்து கொண்டிருந்த குட்டியானை போன்ற வண்டி வந்து இருசக்கர வாகனத்தில் இடித்ததில் எனது மாமனார் கீழே விழுந்து பின்னந்தலையில் அடிப்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். எனது மகன் அடிப்பட்டதில் மயங்கி கீழே விழுந்து விட்டார். அஜீத் என்பவருக்கும் காயங்கள் ஏற்பட்டது. பின்னர் எனது மகன் மற்றும் அஜீத்தை காரியாபட்டி அரசு மருத்துவமனைக்கு எனது உறவினர்கள் கொண்டு சென்றனர். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:—**

பஸ் ஸ்டாப்பில் கிழக்கு பகுதியில் சம்பவம் நடந்த போது நானும், எனது மகள்கள் மட்டும் தான் அங்கிருந்தோம். வேறு நபர்கள் பஸ் ஸ்டாப்பில் இல்லையென்றால் சரிதான். இறந்தது எனது மாமனார் என்பதால் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சத்தம் கேட்டு தான் திரும்பி போய் பார்த்தேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை:—**

இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

| | |
|---|---|
| Calender Miscellaneous | **CC.No. 46 /2024** |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of witness for | Prosecution<br>Defence |

| | |
|---|---|
| Name | : முத்துமுருகன் (PW. 4 ) |
| Father/Husband Name | : பாண்டி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15th day May of 2025

(எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை:–**

நான் தற்போது வக்கானங்குண்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 29.10.2020 ம் தேதி மாலை 6.30 மணியளவில் நானும், அலக்ஜ்சாண்டர் என்பவரும் எங்கள் ஊரில் உள்ள மாரியப்பன் பெட்டி கடை முன்பு நின்று பேசி கொண்டிருந்த போது விபத்து வழக்கு சம்மந்தமாக போலீசார் எங்களை விசாரித்து எங்கள் முன்பு படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்ததில் நானும், அலக்ஜ்சாண்டர் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். (அந்த பார்வை மகஜர் **அசா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது).

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–**

வரைபடத்தில் விபத்து நடைபெற்ற இடம் காரியாபட்டியிலிருந்து – தூத்துக்குடி செல்லும் சாலையில் மேற்கு பக்கம் சாலை ஓரத்தில் நடைபெற்றதாக வரைபடத்தில் உள்ளது என்றால் சரிதான். கிழக்கு பக்கம் பஸ் ஸ்டாப் இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். போலீசார் வரைபடம் தயாரித்த பின் என்னிடம் மாரியப்பன் பெட்டி கடை அருகில் என்னிடம் கையொப்பம் பெற்றனர் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை:–**

இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

Calender Miscellaneous **CC.No. 46 /2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | அலக்ஸ்சாண்டர் (PW. 5 ) |
| Father/Husband Name | : | பாண்டியன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15th day May of 2025

(எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை:–**

நான் தற்போது வக்காணங்குண்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் சோலார் நிறுவனத்தில் மேற்பாரவையாளராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 29.10.2020 ம் தேதி மாலை 6.30 மணியளவில் நானும், முத்துமுருகன் என்பவரும் எங்கள் ஊரில் உள்ள மாரியப்பன் பெட்டி கடை முன்பு நின்று பேசி கொண்டிருந்த போது விபத்து வழக்கு சம்மந்தமாக போலீசார் எங்களை விசாரித்து எங்கள் முன்பு படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்ததில் நானும், முத்துமுருகன் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–**

மாரியப்பன் பெட்டி கடையில் நின்று கொண்டிருந்த போது தான் போலீசார் சம்பவம் இடம் சென்று வரைபடம் வரைந்து முடித்துவிட்டு என்னிடம் வந்து கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை:–**

இல்லை.